# தமிழகத்துல பாஜ சின்ன கட்சிதான்



## எஸ்.பி.வேலுமணி 'காட்டம்'

மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி அதிமுக கூட்டணி கட்சிகளின் செயல் வீரர்கள் கூட்டம் எம்எல்ஏ ஏ.கே. செல்வராஜ் தலைமையில் பங்களாமேடு பகுதியில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீலகிரி தொகுதி அதிமுக வேட்பாளர் லோகேஷ் தமிழ்ச்செல்வனை அறிமுகம் செய்து வைத்து முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி பேசுகையில்,' டெல்லியில் வேண்டுமானால் பாஜ மிகப்பெரிய கட்சியாக இருக்கலாம். தமிழகத்தை பொறுத்த வரை பாஜக சின்ன கட்சி தான். அதிமுகவுடன் கூட்டணி வைத்து, அதிமுக தயவால் தான் 4 எம்எல்ஏக்களே அவர்களுக்கு கிடைத்துள்ளனர். தமிழகத்தை பொறுத்தவரை அதிமுக, திமுக இடையே தான் நேரடி போட்டி.

பாஜக கணக்கிலேயே இல்லை. வெறும் 4 சதவீதம் ஓட்டு வங்கியை வைத்துள்ள பாஜ இரண்டு கோடி தொண்டர்களை வைத்துள்ள அதிமுகவிற்கு எவ்வாறு ஈடாகும்?,'என்றார்.

# தமாகா கொடி இல்லாத வாகனத்தில் ஏறி பிரசாரம் செய்த ஜி.கே.வாசன்




புதுச்சேரிக்கு நேற்று வந்த தமாகா தலைவர் ஜிகே வாசன், முதல்வர் ரங்கசாமியை சந்தித்துவிட்டு லாஸ்பேட்டை பகுதியில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது வேட்பாளர் நமச்சிவாயம் உடனிருந்த நிலையில், தலைவர்களின் பிரசாரத்துக்காக கட்சி ஏற்பாடு செய்திருந்த பிரசார வாகனத்தில் பாஜ, என்ஆர் காங்கிரஸ், பாமக, அமமுக உள்ளிட்ட கட்சிகளின் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. ஆனால் நமச்சிவாயத்துக்கு ஆதரவு திரட்டிக் கொண்டிருந்த ஜிகே வாசனின் தமாகா கட்சியின் கொடி இடம் பெறவில்லை.

அந்த இடம் காலியாக இருந்த நிலையில், இதை அங்கிருந்த கட்சிகளின் தொண்டர்கள் நகைச்சுவையாக விமர்சித்தபடி பங்கேற்றனர். இதனால் கூட்டணி கட்சிகள் இடையே சலசலப்பு ஏற்பட்டது. மேலும் மூப்பனார் தமாகாவை தொடங்கி, அரசியலில் உச்சகட்ட செல்வாக்கில் இருந்த காலத்தில் புதுச்சேரி தமாகாவில் நமச்சிவாயம் கட்சி பணியாற்றியதை சுட்டிக் காட்டிய ஆதரவாளர்கள், தற்போது அக்கட்சி புதுச்சேரியில் பெயரளவில் மட்டுமே இருப்பதாக முணுமுணுத்தனர். அப்போது சிலர் பாஜவில், தமாகாவை ஐக்கியமாக்கி விடலாம் என கமெண்ட் அடித்ததையும் காதுகளில் கேட்க முடிந்ததாக அரசியல் நோக்கர்கள் தெரிவித்தனர்.

# எடப்பாடியை வீழ்த்தவே டிடிவி.யுடன் கூட்டணி



## ரவீந்திரநாத் ஆவேசம்

தேனி அருகே பழனிசெட்டிபட்டியில் ஓபிஎஸ் மகனான ஓ.பி.ரவீந்திரநாத்திடம் நேற்று நிருபர்கள், "ஜெயலலிதாவின் மரணத்தில் மர்மம் இருப்பதாக கூறியார் மீது சந்தேகமடைந்து குற்றம் சுமத்தினீர்களோ அவர்களுடனேயே கூட்டணி அமைத்துள்ளது ஏன்" என்றனர். அதற்கு அவர், "இது காலத்தின் கோலம். அரசியலில் எல்லா நேரங்களிலும் ஒரே மாதிரியான நிலைப்பாடு எடுக்க முடியாது. அந்தந்த காலத்திற்கு ஏற்ப முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது. அந்த கால கட்டத்தில் அப்படி சொல்ல வேண்டியிருந்தது. 50 ஆண்டுகள் அதிமுகவுக்காக பாடுபட்ட ஓ.பன்னீர்செல்வத்திற்கு, எடப்பாடியால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை சமாளிக்க வெற்றி பெற வேண்டியுள்ளது. அதனால்தான் எடப்பாடியை தோல்வியடையச் செய்ய டிடிவி. தினகரனுடன் சேர்ந்துள்ளோம்" என்றார்.

## தேர்தல் யுத்தம்

# இந்தியாவை சர்வாதிகார பாதைக்கு இழுத்து செல்லும் மோடி

## ப.சிதம்பரம் 'பளார்.. பளார்...'



சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் சாக்கோட்டை திமுக மேற்கு ஒன்றியம் சார்பில் காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி சிதம்பரத்தை ஆதரித்து, இந்தியா கூட்டணி நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது. அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை வகித்தார். அதில் ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பேசியதாவது:

2019ல் நாடாளுமன்ற தேர்தல் நடந்தது. 2024ல் நடக்கிறது. மீண்டும் பாஜவும், மோடியும் ஆட்சியமைத்தால் 2029ல் நாடாளுமன்ற தேர்தல் நடக்காது. நாட்டை சர்வாதிகார பாதையில் அழைத்து செல்கின்றனர். மாநில அரசுகளை அச்சுறுத்தி, அதிகாரங்களை பறித்து அரசியல் சாசனத்தை திருத்த பார்க்கின்றனர். ஒரு நாடு ஒரு கட்சி, ஒரு நாடு ஒரு தலைவர், ஒரு நாடு ஒரு பிரதமர் என்ற திசையில்தான் நாடு போய்க் கொண்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்னர் தேர்வு செய்யப்பட்ட ஒரு மாநில முதல் வரை ஒன்றிய அரசு கைது செய்ய முடியும் என்று யாரும் நினைத்தது கூட கிடையாது. எந்த காலத்திலும் ஒன்றிய அரசு, முதல்வரை கைது செய்தது இல்லை. தற்போது இரண்டு முதல்வர்கள் சிறையில் உள்ளனர். கெஜ்ரிவால் கைது என்பது அனைத்து முதல்வர்களுக்கும் கொடுக்கப்பட்ட எச்சரிக்கை.

இந்த தேர்தலில் வெற்றி பெறுவது நிச்சயம். முதல்வர் மு.க.ஸ்டாலின் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறார். மோடி சொன்ன வாக்குறுதியை எதுவும் நிறைவேற்றவில்லை. விலைவாசியை கட்டுப்படுத்த முடியாத அரசு, வேலையில்லா திண்டாட்டத்தை தணிக்க முடியாத அரசு எதற்காக நாற்காலியில் அமர வேண்டும். உங்களால் முடியாவிட்டால் வெளியே செல்லுங்கள். நாட்டில் ஜனநாயகம் காப்பற்ற வேண்டும். இதற்காக காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு பேசினார்.

# பூவை ஜெகன்மூர்த்தி பாஜ கூட்டணியில் விரைவில் இணைவார்

## ஏ.சி.சண்முகம் 'திடீர் குண்டு'



வேலூர் மக்களவை தொகுதியில் புதிய நீதிக்கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம் தாமரை சின்னத்தில் போட்டியிடுகிறார். இதற்காக நேற்று கே.வி.குப்பம் சட்டமன்ற தொகுதியில் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் அறிமுகக் கூட்டம் நடந்தது. அப்போது, ஏ.சி. சண்முகம் பேசுகையில், 'புரட்சி பாரதம் கட்சியின் தலைவரும், கே.வி. குப்பம் எம்எல்ஏவுமான பூவை ஜெகன்மூர்த்தி நம்முடைய கூட்டணியில் விரைவில் இணைய போகிறார்' என நம்பிக்கையுடன் பேசினார்.

அதிமுக கூட்டணியில் இருக்கும் ஜெகன் மூர்த்தி நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் தங்களுக்கு எம்பி சீட் தரவில்லை என ஆத்திரத்தில் உள்ளதாக கூறப்படுகிறது. மேலும், அதிமுக கூட்டணி சார்பில் நடந்து வரும் வேட்பாளர் பிரசாரத்தில் உட்பட அதிமுக கூட்டணி தேர்தல் பணிகள் எதிலும் புரட்சி பாரதம் கட்சியினர் யாரும் கலந்து கொள்வதில்லை. தங்களது ஆதரவு குறித்து ஜெகன்மூர்த்தி எந்த முடிவையும் அதிகாரபூர்வமாக அறிவிக்காத நிலையில், ஏ.சி. சண்முகம் தங்களது கூட்டணிக்கு ஜெகன்மூர்த்தி எம்எல்ஏ வருவார் என பேசியது அதிமுக கூட்டணி கட்சியினர் இடையே பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

## பாஜ எங்களுக்கு உதவி இருந்தால்

# எடப்பாடியை ஊதி தள்ளிருப்பேன்

## டிடிவி.தினகரன் ஆவேசம்



மதுரை மாவட்டம், அலங்காநல்லூரில் தேனி தொகுதி அமமுக வேட்பாளர் டிடிவி.தினகரன், செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஜெயலலிதா மறைவிற்கு பிறகு அவருக்கு வேண்டிய அதிமுக ஆட்சியை தொடர்வதற்காக எடப்பாடி பழனிசாமிக்கு வாய்ப்பு கொடுத்தோம். அவர் ஆட்சியில் அமர்ந்ததும் எங்களையும் சார்ந்தவர்களையும், ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட பலரையும் அதிமுகவில் இருந்து நீக்கினார். அந்த சமயத்தில் எனக்கு ஆதரவு அளித்த 18 எம்எல்ஏக்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்ட விவகாரத்தில் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக அப்போதைய தமிழக ஆளுநரிடம் கோரிக்கை வைத்தோம். அப்போது எங்களுக்கு பாஜ உதவி செய்யவில்லை. மாறாக எங்களுக்கு உதவி இருந்தால் எடப்பாடி பழனிசாமி இருக்கும் இடம் தெரியாமல் ஊதி தள்ளி இருப்பேன்.

அதேபோல் ஓ.பன்னீர்செல்வம் மட்டும் அவரது ஆதரவு எம்எல்ஏக்களுடன் எடப்பாடி பழனிசாமியிடம் சேராமல் இருந்திருந்தால் இன்று எடப்பாடி பழனிசாமி இருக்கும் இடம் தெரியாமல் போய் இருப்பார். ஆனால் தற்போது ஓ.பன்னீர்செல்வத்தையே அவர் நிராயுதபாணியாக மாற்றிவிட்டார். எடப்பாடி பழனிசாமி, பாஜவிற்கு விசுவாசமாக இல்லை. ஓ.பன்னீர்செல்வத்தையும் அவர் அரவணைத்து செல்லவில்லை. எடப்பாடி ஒரு அரக்கருக்கு நிகரானவர். அதே போல அதிமுகவின் ஆணிவேர் என்பது யார்? கிளைகள் என்பது யார் என்பது இந்த நாடாளுமன்ற தேர்தல் முடிந்ததும் தெரியும். இவ்வாறு அவர் பேசினார்.



### பபூன் உதயகுமாரே அதிமுக பிரிய காரணம்

டிடிவி தினகரன் மேலும் கூறுகையில், 'முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயக்குமார் ஒரு பபூன். அவரைப் போன்ற நபர்களுக்கெல்லாம் நான் பதில் சொல்வது கிடையாது. அதிமுக இன்று பல அணிகளாக பிரிவதற்கு ஆர்.பி.உதயக்குமார் என்ற பபூன் தான் காரணம். எனக்கு இந்த தேர்தலில் நிற்பதற்கு விருப்பமில்லை என்றாலும், தேனி மக்கள் என்னை விரும்பியதால் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது,'என்றார்.



## வடகிழக்கு இரயில்வே

இணையதளம்: www.ner.indianrailways.gov.in மின்னஞ்சல்: cos@ner.railnet.gov.in

**ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எண். 25, நாள்: 28.03.2024**
**மின்-கொள்முதல் முறை மூலம் ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்பு**

முதன்மை தலைமை சரக்கு மேலாளர், வடகிழக்கு இரயில்வே, கோரக்பூர்–273012 அவர்கள், மற்றும் இந்திய குடியரசுத் தலைவர் சார்பாக, பின்வரும் பொருட்களின் வழங்கலுக்காக மின்–கொள்முதல் முறை வழி ஒப்பந்தப் புள்ளிகளை வரவேற்கிறார். பொருளின் முழு விவரம் மற்றும் பிற நிபந்தனை www.ireps.gov.in இணையதளத்தில் கிடைக்கப்பெறும்.

| இனம் எண் | டெண்டர் எண் | தவணை தேதி | சரக்குகளின் குறு விவரம் | கொள்முதல் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டோர் |
|---|---|---|---|---|
| 1 | 23231024A | 27.05.24 | அலுமினியம் செக்கர்டு சீட் அளவு 2774x82 ஏனையவை | -- |
| 2 | 22241253 | 20.05.24 | கேஸ்நப் 22 என்எல்–லுக்கான பிரேக் பீம் கம்ப்ளீட் ஏனையவை | RDSO |
| 3 | 22231192A | 20.05.24 | ஃபியிட் போகிக்கான பால் ஜாயின்ட் டிராக்சன் லிவர் ஏனையவை | -- |
| 4 | 22230371 | 13.05.24 | அண்டர் ஸ்லங் வாட்டர் டேங்க் மாடியூல் (எல்.எச்.&ஆர்) ஏனையவை | -- |
| 5 | 22221851B | 13.05.24 | எஸ்கார்ட்ஸ் மேக் இபி–க்கான ஓவர்ஹாலிங் கிட் ஏனையவை | -- |
| 6 | 22242104 | 06.05.24 | வீல் செட் எர்த்திங்குக்கான எர்த்திங் ரெசிஸ்டர் ஏனையவை | MCF, ICF, RCF |
| 7 | 33230088B | 02.05.24 | போர்சலைன் 9 டன் இன்சுலேட்டர் (ஆர்ஜ 6020–1) ஏனையவை | CORE |
| 8 | 24240169 | 01.05.24 | ஈக்குலைஸர் (மாடிஃபைடு) மெட்டாலிக் அல்லாதவற்றுடன் ஏனையவை | CLW |
| 9 | 24240598 | 01.05.24 | ஆயில் கூலர் ரேடியேட்டர் ஏனையவை | CLW |
| 10 | 26235203 | 30.04.24 | இஆர்சிஎம்கேவி–யின் தயாரிப்பு மற்றும் விநியோகம் ஏனையவை | RDSO |
| 11 | 22241852 | 30.04.24 | எஸ்கார்ட்ஸ் மேக் இபி–க்கான வால்வு தொகுப்பு ஏனையவை | -- |
| 12 | 22230786 | 29.04.24 | கம்ப்ளீட் அசெம்ப்ளிக்கான மெயின்டோர் லாக் ஏனையவை | -- |
| 13 | 24241024 | 29.04.24 | குழாய் மாற்றுக்கான காப்பர் கேஸ்கட் தொகுப்பு ஏனையவை | -- |
| 14 | 22231179A | 29.04.24 | ஆக்ஸில் பாக்ஸுக்கான குளோசிங் பிளேட் கைடு ஏனையவை | MCF, ICF, RCF |
| 15 | 28240932A | 29.04.24 | ஃப்ளக்ஸ் கோர்டு எம்ஜஜி/எம்ஏஜி வெல்டிங் ஏனையவை | ICF |
| 16 | 33231088C | 25.04.24 | ஜாய்ன்ட்லஸ் க்ரூவ்டு காப்பர் கான்டாக்ட் ஏனையவை | CORE |
| 17 | 30231142 | 25.04.24 | ஃபோர் வி டீப் க்ரூவ் ஆக்ஸில் புல்லி ஏனையவை | -- |
| 18 | 22241093 | 24.04.24 | ஆர்சிஎப் டிஆர்ஜி. எண். LW 05125க்கான லிங்க் பின் ஏனையவை | -- |
| 19 | 24241149 | 23.04.24 | வேக்குவம் சர்க்கியூட் பிரேக்கர் ஏனையவை | CLW |
| 20 | 24241313 | 22.04.24 | மேல் மற்றும் கீழ்ப் பகுதிக்கான ஸ்டாட்டர் ஏனையவை | CLW |
| 21 | 28241060A | 22.04.24 | பியூ புட்டியுடன் கூடிய தின்னர் கம்பாட்டியபிள் ஏனையவை | -- |
| 22 | 22241148 | 22.04.24 | பஃப்பர் பிளஞ்சருக்கான ஃபேஸ் பிளேட் ஏனையவை | MCF, ICF, RCF |
| 23 | 22241978 | 22.04.24 | எஸ்கார்ட்ஸ் மேக் லெவலிங்குக்கான பிஓஎச் கிட் ஏனையவை | -- |
| 24 | 28245566 | 22.04.24 | ஹெலிக்கலுக்கான ஆரம்ப பூச்சு/இறுதிப் பூச்சு ஏனையவை | -- |
| 25 | 28241363 | 22.04.24 | ஐசிஎப்–புக்கான அல்கிட் பெயின்ட்ஏனையவை | -- |
| 26 | 30240431 | 22.04.24 | டிஸ்கனெக்டிங் அண்டு எர்த்திங் டிவைஸ் ஏனையவை | -- |
| 27 | 35240989 | 22.04.24 | தெர்மோபிளாஸ்டிக் பாலியுரேத்தேன் தொகுப்பு ஏனையவை | BLW |
| 28 | 24240843 | 19.04.24 | இன்ட்டர்லாக் அசெம்ப்ளி தொகுப்பு ஏனையவை | CLW |
| 29 | 24241460 | 19.04.24 | எம்என் வியர் தொகுப்பு ஏனையவை | CLW |
| 30 | 30241222 | 17.04.24 | ரெக்டிஃபயர் மற்றும் ரெகுலேட்டர் ஏனையவை | -- |
| 31 | 35240988 | 16.04.24 | இம்ப்ரூவ்டு ரப்பர் சைடு பியர் ஏனையவை | BLW |
| 32 | 28230446B | 15.04.24 | ஜெனரல் பெயின்ட் அலுமினியம் பிரஷிங் ஏனையவை | -- |
| 33 | 24241662 | 15.04.24 | ஹெக்ஸ் ஹெட் போல்ட் & ஹெக்ஸ் தொகுப்பு ஏனையவை | CLW |
| 34 | 22231824A | 15.04.24 | 1400 எச்பி–க்கான கிட், வைப்பர் மோட்டார் அசெம்ப்ளி ஏனையவை | -- |
| 35 | 21235002C | 15.04.24 | வடிவமைப்பு, தயாரிப்பு, விநியோகம் ஏனையவை | -- |
| 36 | 29245003A | 15.04.24 | மல்டி செக்சன் டிஜிட்டலுக்கான விநியோகம் ஏனையவை | RDSO |
| 37 | 24245010 | 15.04.24 | 7775 கேவிஏக்கான மெயின் டிரான்ஸ்ஃபார்மர் ஏனையவை | CLW |
| 38 | 30241219 | 15.04.24 | லெட் பேஸ் எமர்ஜென்சி லைட் ஏனையவை | -- |

CPRO/S-150 முதன்மை தலைமை சரக்கு மேலாளர், கோரக்பூர்

ரயில்களில் புகை பிடிக்காதீர்


## ஒன்றிய பாஜ அரசை வீழ்த்துவதற்கு

# தமிழ்நாட்டில் இருந்துதான் தீப்பொறி புறப்பட இருக்கிறது



▶ தேனாம்பேட்டை காமராஜர் அரங்கத்தில் நடந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு காங்கிரஸ் துணை தலைவர் கோபண்ணா எழுதிய 'பாசிசம் வீழட்டும் இந்தியா மீளட்டும்' என்ற தேர்தல் பிரசார கையேட்டை மாநில தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட, திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பெற்றுக்கொண்டார். அருகில், மாநில துணை தலைவர் சொர்ணா சேதுராமன், எஸ்.சி. துறை தலைவர் ரஞ்சன் குமார், மாவட்ட தலைவர்கள் திரவியம், டில்லிபாபு.

## செல்வப்பெருந்தகை பரபரப்பு பேச்சு

**சென்னை, மார்ச் 30:** ஒன்றிய பாஜ அரசை வீழ்த்துவதற்கு, தமிழ்நாட்டில் இருந்து தான் தீப்பொறி புறப்பட இருக்கிறது என்று செல்வப்பெருந்தகை கூறினார்.

தமிழக காங்கிரஸ் கட்சியின் மாநில துணை தலைவர் ஆ.கோபண்ணா எழுதிய 'பாசிசம் வீழட்டும், இந்தியா மீளட்டும்' என்ற தேர்தல் பிரசார நூல் வெளியீட்டு விழா தேனாம்பேட்டை காமராஜர் அரங்கத்தில் நேற்று நடந்தது. தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தலைமை வகித்து, தேர்தல் பிரசார நூலை வெளியிட, திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பெற்றுக் கொண்டார்.

அதை தொடர்ந்து, தேனாம்பேட்டை காமராஜர் அரங்க முகப்பு வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள காமராஜர் புகைப்பட கண்காட்சியை செல்வப்பெருந்தகை திறந்து வைத்தார்.

அப்போது, அவர் பேசியதாவது: பிரதமர் மோடியின் மக்களுக்கு எதிரான அநீதிகள், அவர் செய்த ஊழல்கள், தேர்தல் பத்திர முறைகேடுகள் பற்றிய முழு விவரம் இந்த நூலில் இடம்பெற்றுள்ளது. இன்று புனித வெள்ளி, இயேசு தன்னுடைய தேவாலயத்தில் தவறு செய்தவர்களை எல்லாம் சாட்டை எடுத்து விரட்டி அடித்தார் என்று சொல்வார்கள், தற்போது அதேபோன்று தான் இந்தியா கூட்டணி தலைவர்கள் சாட்டையை கையில் எடுத்துள்ளார்கள்.

தமிழ்நாட்டில் இந்தியா கூட்டணி என்ற ஒரு வலிமையான கூட்டணி அமைக்கப்பட்டு இருக்கிறது. இந்த கூட்டணி தான் இந்திய தேசத்துக்கும், தமிழ் நாட்டுக்கும் மிகப்பெரிய திருப்பத்தை ஏற்படுத்தப் போகிறது. 2019ம் ஆண்டை காட்டிலும், இந்த முறை 40 தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி வேட்பாளர்கள் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார்கள்.

நாட்டு மக்களுக்கு எந்த விதத்தில் சோதனை வந்தாலும் அது சமூகநீதி ஆகட்டும், இயற்கை நீதியாகட்டும், முதலில் குரல் கொடுப்பது தமிழ்நாடு தான். தற்போது பாசிச பாஜ ஆட்சியை வீழ்த்துவதற்கு தமிழ்நாட்டில் இருந்து தான் தீப்பொறி புறப்பட இருக்கிறது என்பது இன்றைய வரலாறு.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில், மாநில துணை தலைவர் சொர்ணா சேதுராமன், சென்னை மாநகராட்சி குழு தலைவர் எம்.எஸ்.திரவியம், எஸ்சி பிரிவு தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார், மாவட்ட தலைவர்கள் முத்தழகன், டில்லி பாபு, மாநில செயலாளர்கள் எஸ்.ஏ.வாசு, பி.வி.தமிழ் செல்வன், இலக்கிய அணி தலைவர் புத்தன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## பொது அறிவிப்பு

ICICI Home Finance

**பதிவு அலுவலகம்:** ஐசிஐசிஐ வங்கி டவர்ஸ், பாந்த்ரா–குர்லா வளாகம், பாந்த்ரா (கிழக்கு), மும்பை–400051

**கார்ப்பரேட் அலுவலகம்:** ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், ஜேபி நகர், அந்தேரி குர்லா சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை–400059

**கிளை அலுவலகம்:** 3–வது தளம், M.T.ராஜன்ஸ் சதுக்கம், கதவு எண்.40, பசுல்லா சாலை, தி.நகர். சென்னை – 600 017

பின்வரும் கடன்தாரர்/கள் ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் ("ஐசிஐசிஐ எச்எஃப்சி") வசமிருந்து அவர்களால் பெறப்பட்ட கடன் வசதிகளின் அசல் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்துவதில் தவறியுள்ளனர் மேலும் கடன்கள் செயல்படா சொத்துகள் (NPA) ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவர்களுக்கு பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறு–சீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம்–2002 இன் பிரிவு 13(2) கீழ் அவர்தம் கடைசியாக தெரிந்த முகவரிகளில் ஒரு அறிவிப்பு வழங்கப்பட்டது, இருந்தபோதும் அது பட்டுவாடா செய்யப்படவில்லை எனவே அவர்களுக்கு இதன்மூலம் இந்த பொது அறிவிப்பு வழியே அறிவிக்கப்படுகிறது.

| வ. எண் | கடன்தாரர்/உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர் / (கடன் கணக்கு எண்) & முகவரி | கடனீட்டுச் சொத்து/ அமலாக்கப்படும் சொத்தின் சொத்து முகவரி | அறிவிப்பு அனுப்பிய நாள்/அறிவிப்பு தேதியன்று நிலுவை | செயல்படா சொத்து நாள் |
|---|---|---|---|---|
| 1. | ஐயப்பன் P (கடன்தாரர்), R விமலா (உப–கடன்தாரர்), மனை எண்.13, 2வது தளம், குமரன் தெரு, பாலாஜி நகர், அனகாபுத்தூர் சென்னை, தமிழ்நாடு–600070. LHCTN00001386377 | F1, குமரன் சாலை, பாலாஜி நகர் விரிவு, அனகாபுத்தூர் கிராமம், பல்லாவரம் தாலுகா காஞ்சிபுரம் மாவட்டம், அனகாபுத்தூர் O.S.எண். 8/2, N.S.எண். 8/18, பட்டா எண்.4579 சென்னை, தமிழ்நாடு–600075. எல்லைகள்: வடக்கு: மனை எண்.06, தெற்கு: 20 அடி சாலை, கிழக்கு: மனை எண்.14, மேற்கு: மனை எண்.12 | 18-03-2024 Rs. 23,48,000/- | 04/03/2024 |

அறிவிப்பின் மாற்றுமுறை பட்டுவாடா நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்கூறிய கடன்தாரர்/கள் மற்றும்/அல்லது அவர்தம் ஜாமீன்தாரர்கள் (பொருந்துமாறு) இந்த அறிவிப்பின் பிரசுரத் தேதியிலிருந்து 60 நாட்கள் காலத்திற்குள் நிலுவைத்தொகையைச் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றனர் இல்லையெனில் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறு–சீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின்படி மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நாள்: மார்ச் 30, 2024
இடம்: சென்னை

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

TATA

## டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400 013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

### அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8(6) கீழ் உடன் விதி 9(1))

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், படிக்கவும் 2002 இன் விதி 8(6) கீழ் உடன் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்), 2002 கீழ் அசையாச் சொத்துகள் மின் -ஏல விற்பனை அறிவிப்பு**

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/ பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எப்எல்)** வசம் அடமானம் வைக்கப்பட்ட, **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்** அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக **'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு'** மேலும் **'உள்ளது எதுவோ அது'** அடிப்படையில் **18.04.2024** நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்திவைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 18.04.2024 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது, டிசிஎச்எப்எல் கிளை முகவரி: **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்,** முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் **16.04.2024 அன்று மாலை 5 மணி வரை** அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட சுருக்கமான விவரங்களின்படி **'உள்ளது உள்ள நிலையில் நிபந்தனையில்'** ஆனதாகும்:

| வ. எண் | கடன் கணக்கு எண் | கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர் | கோரிக்கை அறிவிப்பின்படி தொகை | நிர்ணய விலை | முன்வைப்புத் தொகை | சுவாதீன வகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | TCHHL04 04000100 070915 | ரேவதி P<br>திருமதி. கன்னியம்மாள் P | ரூ. 41,38,719/- (ரூபாய் நாற்பத்து ஒரு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து எழுநூற்று பத்தொன்பது மட்டும்) & 17.05.2022 | ரூ. 32,75,000/- (ரூபாய் முப்பத்து இரண்டு இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) | ரூ. 3,27,500/- (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) | கையக |
| | | | | | | |
| 2. | TCHIN040 400010012 6410 & TCHHL040 400010012 6043 | திரு. ரிச்சர்டு ராஜதுரை கிருஷ்ணன்<br>திருமதி. செல்வி R | கடன் கணக்கு எண். TCHHL0404000100126043 இன்படி ரூ. 19,69,127/- மற்றும் கடன் கணக்கு எண். TCHIN0404000100126410 இன்படி ரூ. 96,656/- என மொத்தமாக ரூ. 20,65,783/- & 23.08.2023 | ரூ. 22,00,000/- (ரூபாய் இருபத்தி ரெண்டு இலட்சம் மட்டும்) | ரூ. 2,20,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) | கையக |

**அசையா சொத்தின் விவரங்கள் (வ. எண் 1):** செங்குன்றம் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், மொத்தம் உள்ள 1,16,412 ச.அடி அல்லது 2 ஏக்கர்கள் 67 சென்ட்கள் உள்ள நிலத்தில் திறந்தவெளி விகிதமாக மறைமலை நகர் நகராட்சிக்கு வழங்கப்பட்ட 11,679 ச.அடி நிலம் போக, மீதமுள்ள 1,04,733 ச.அடி நிலத்தில் அங்கீகார எண்.80C/2021, பரப்பளவு 897 ச.அடி உள்ள பிளாட் எண்.A–409, நான்காவது தளம், பிளாக் A –இல் கீழ்புறத்தில் உள்ள கார் நிறுத்துமிடம் உள்பட பிரிக்கப்படாத 425.36 ச.அடி பங்கு உள்ள சொத்தின் சர்வே எண்கள்: 191/3B & 191/4, பட்டா எண். 2609 (பட்டாவின்படி, சர்வே எண்: 191/3B1 & 191/4(A) இல் அடங்கிய அனைத்துத் துண்டுகளும் பகுதிகளும் அடங்கியுள்ள காலி நிலம் உள்ள சொத்து. எல்லைகள்: **வடக்கு:** சர்வே எண்.230 இல் உள்ள காலி நிலம், **தெற்கு:** செங்குன்றம் சாலை, **கிழக்கு:** சர்வே எண். 191/4B, 3B3 மற்றும் 2A2A1 இல் உள்ள சொத்து, **மேற்கு:** மறைமலர் நகர் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட திறந்தவெளி நிலம். இந்தப் பகுதியானது செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு இணைப்பு II சார் பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது. **அட்டவணை B: (இங்குள்ள சொத்து விற்பவரிடம் இருந்து வாங்குபவருக்கு அளிக்கப்பட்டது)** அட்டவணை– A இல் 425.36 ச.அடி பரப்பளவு உள்ள பிரிக்கப்படாத பங்கு மற்றும் பயன்கள் உள்ள நிலம்.

**குறிப்பு:** கடன்தாரரால் TCHFL எதிராக பதிவு செய்யப்பட்ட திவால் நோட்டீஸ் (F1.எண்.2/2023–Bin I.P.எண் 8/2022) சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கில் TCHFL க்கு எதிராக எந்த தடையுத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. ஏலதாரர்கள் ஏலத்துக்கு முன் கடனுக்கான நடவடிக்கையை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். வழக்கின் தன்மையைப் பொருத்து ஏல நடவடிக்கை இருக்கும்.

**அசையா சொத்தின் விவரங்கள் (வ. எண் 2):** அனைத்து துண்டுகளும் பகுதிகளுக்குமாக சர்வே எண். 223/1 & 223/2 மனை எண்.7 இல் உள்ளடங்கிய ஸ்ரீ சீனிவாசா நகர் (DTCP அனுமதி எண்.280/2006) இன்படி 1906 ச.அடி பரப்பானது காஞ்சிபுரம் ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, எண்.43, வடமங்கலம் கிராமம், மாவட்டத்தில் அமைந்துள்ளது. எல்லைகள்: **வடக்கு:** மனை எண்.6, **தெற்கு:** காலி நிலம், **கிழக்கு:** காலி நிலம், **மேற்கு:** 30 அடி லே அவுட் சாலை. மேலும் **அளவீடு:** வடக்குப் பகுதியில் கிழக்கு மேற்காக – 60 அடி, தெற்கு பகுதியில் கிழக்கு மேற்காக 60.1 அடி, கிழக்குப் பகுதியில் வடக்கு தெற்காக 33.6 அடி, மேற்கு பகுதியில் வடக்கு தெற்காக 30 அடி என 1906 ச.அடி பகுதி, சுங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தில அமைந்துள்ளது.

ஏலத்தில், பொதுவாக பொதுமக்கள் தனிப்பட்ட முறையில் தங்கள் ஏலப்புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். கடன்தாரர்(கள்)/உப–கடன்தாரர் (கள்) ஆகியோருக்கு இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைகளைச் செலுத்த இதன்மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. அவ்வாறு செலுத்த தவறினால் அசையாச் சொத்து திட்டமிட்டபடி விற்பனை செய்யப்படும். ஏலத்தேதிக்கு முன்பாக மேற்கூறிய நிலுவைத்தொகை, வட்டி மற்றும் செலவுகளுடன் (விற்பனை செலவு உட்பட) அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் வழங்கப்பட்டால் அல்லது இவ்வித கடனீட்டுக் கடன்தொகை, வட்டி மற்றும் செலவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்று அவருடைய திருப்திக்குரியவாறு சான்று அளிக்கப்பட்டால் மின்னணு ஏலம் நிறுத்தப்படும்.

இந்த விற்பனை தொடர்பாக ஏதேனும் பணியை செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் பயனைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்கும்விதமாக நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது.

விற்பனையானது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது ஆகும்:

**குறிப்பு: மின்–ஏலம் ஆனது http://www.bankauctions.in என்ற இணைய முகப்பு மூலம் 18.04.2024 அன்று பிற்பகல்** 2.00 **மணி முதல்** 3.00 **மணிக்குள் தலா 10 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.**

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனை: 1.** இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்க மாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்ப உரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். **2.** நிர்ணய விலைக்கு குறைவாக அசையாச் சொத்து விற்பனை செய்யப்பட மாட்டாது. **3. ஏலம் உயர்த்தும் தொகை: ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) 4.** சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் TATA CAPITAL HOUSING FINANCE LTD பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத் தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகை செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும். **5.** உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வ தகுதியடைந்தவர். மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்கு குறைவில்லாதது என்பதை பொறுத்து வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறையென தெளிவாக காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **6.** பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக, விற்பனையை ஒத்தி வைத்தல்/நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **7.** முன் அனுமதியின் பேரில் **10.04.2024 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்** அசையாச் சொத்தினை பார்வையிடலாம். **8.** வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்கு பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத்தொகை உள்ளடக்கமாக கொள்முதல் பணம்/ஏலப்புள்ளி தொகையின் இருபத்தைந்து சதவீதத்தை செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், ஏலமிடப்பட்ட சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும்/தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். **9.** மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகை செலுத்தப்பட்டு விட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதியான தேதியிலிருந்து, இந்த நாளை தவிர்த்து, 15 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பாக செலுத்த வேண்டும். 15வது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15ஆவது நாளுக்கு பிந்தைய முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். **10.** மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் பணப்பட்டுவாடா செய்ய தவறும்பட்சத்தில், சொத்து புதிதாக ஏலத்துக்கு வைக்கப்படும்/ தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். முன்வைப்புத்தொகை உட்பட செலுத்தியத் தொகை **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** மூலம் கைக்கொள்ளப்படும். ஏற்கெனவே ஏலம் எடுத்தவர் சம்பந்தப்பட்ட நிலம்/ தொகை தொடர்பாக எந்த உரிமையையும் கோர முடியாது. **11.** மேற்கூறப்பட்டசொத்து தொடர்பான **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்குத்** தெரிந்த, ஏதேனும் வில்லங்கங்களின் விவரங்கள் பற்றியும், மேலும் அந்த சொத்து தொடர்பான சொத்தின் தன்மை மற்றும் மதிப்பு குறித்த பிற விவரங்கள் மற்றும் சொத்து வரி, மின்கட்டணம் ஏனைய சட்டப்பூர்வ பொறுப்பு நிலுவைகள் உட்பட சொத்து மீதான வில்லங்கங்கள் குறித்து ஏலம் எடுக்கத் திட்டமிடும் ஏலதாரர்கள் தங்கள் சொந்த தனி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். **12. அனைத்து பிற விவரங்களுக்கு அல்லது மின்–ஏலம் மீதான இயங்குதள பயிற்சி நடைமுறைக்கு, எதிர்நோக்கும் ஏலதாரர்கள்– சேவை வழங்குநர், M/s: 4Closure, பிளாக் எண்.605 A, 6ஆவது தளம், மைத்ரிவனம் வணிக வளாகம், அமீர்பேட், ஹைதராபாத்–500038 என்ற முகவரியில் ஒருங்கிணைப்பாளர்கள் திரு.அரிஜித் குமார் தாஸ், 8142000725, 8142000066, 8142000062, மின்னஞ்சல்: arijit@bankauctions.in மற்றும் மின்னஞ்சல்: info@bankauctions.in அல்லது மணீஷ் பன்சால், மின்னஞ்சல் முகவரி Manish.Bansal@tatacapital.com அதிகாரப்பூர்வ அதிகாரி, கைபேசி எண் 8588983696 தொடர்பு கொள்ளலாம். உங்கள் விசாரணையை வாட்ஸ்அப் எண் – 9999078669–க்கு அனுப்பவும்.**
**13.** உயர்ந்தபட்சமாக அறிவிக்கப்பட்ட ஏலத் தொகை மீது 1% மூலத்தில் வரி பிடித்தம் பொருந்தும். மேலும் அது உயர்ந்தபட்ச ஏலதாரரால் செலுத்தப்பட வேண்டும். பணப்பட்டுவாடா ஆனது உரிமையாளர்/ கடன்தாரர்(கள்) பான் எண்ணில் செலுத்தப்பட வேண்டும். மேலும் சலான் நகல் பிரதி எங்கள் நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். **14.** மேற்கூறிய விவரங்களுக்கு கீழ்க்காணும் கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளத்தில் http://surl.li/rvvzf கொடுக்கப்பட்ட இணைப்பை படிக்கவும். **15. மேலும் https://www.tatacapital.com/property–disposal.html என்ற இணைப்பையும் காண்க.**

**கவனத்தில் கொள்க– டாடா கேபிடல்** ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆனது இந்த சொத்து விற்பனை/ஏலத்துக்காக குறிப்பிட்டுள்ள ஏலம் விடும் கூட்டுதாரரைத் தவிர ஏதேனும் தரகர்/முகவரை நியமிக்கவில்லை. விருப்பமுள்ள நபர்கள் இது சம்பந்தமாக அனைத்து சந்தேகங்கள் மற்றும் விசாரணைக்கு கீழே கையொப்பமிட்டவர் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியை மட்டும் தொடர்பு கொள்ள வேண்டும்.

இடம்: சென்னை
நாள்: 30.03.2024

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி,
டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்